Sri N. R. THIAGARAJAN : செலவு செய்வதில், ஜில்லாக்களின் ஜனத்தொகை அடிப்படையில் செலவு செய்யப்படுகிறதா ? அல்லது தேவைக்குத் தகுந்தபடி செலவு செய்யப்படுகிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஜனத்தொகை அடிப்படையில் செலவு செய்வது இல்லை. தேவைக்குத் தகுந்த அளவு செலவு செய்வதற்கு நம்மிடம் பணம் இல்லை. எந்த எந்த அளவுக்குத் திட்டங்களை எடுத்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமோ, அந்த அளவுக்குத் திட்டங்களை எடுத்து நடத்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

Sanitary Inspectors

* 4 *Q*.—**Sri K. RAMACHANDRAN** : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is guarantee of employment to all the persons qualified as Sanitary Inspectors;

(*b*) the pay-scale of Sanitary Inspectors; and

(*c*) whether there is any proposal to increase their pay?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Rs. 60—3—90—EB—4—130 for ordinary grade and Rs. 140—5—190 for selection grade.

(*c*) No.

Sri K. RAMACHANDRAN : ஹெல்த் இன்ஸ்பெக்டர்களும் சானிடரி இன்ஸ்பெக்டர்களுடைய வேலையைத்தான் கவனிக்கிறார்கள். அப்படியிருக்க சம்பள விகிதத்தில் ஏற்றத் தாழ்வு இருக்கிறதா ? ஏற்றத் தாழ்வு இருக்கிறதென்றால், இரண்டு சம்பள விகிதங்களையும் ஒன்றாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இப்பொழுது ஹெல்த் இன்ஸ்பெக்டர்களுக்கும் ஹெல்த் அஸிஸ்டெண்டுகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. மற்றபடி வேறு ஏதாவது மாறுதல் செய்வதாக தற்போது உத்தேசம் இல்லை.

Sri A. A. RASHEED : Is there any proposal to appoint Sanitary Inspectors to Class I Panchayats also?

The Hon. Sri M. A. MANICKAVELU : I want notice, Sir.

Sri M. K. SOMASUNDARAM : பஞ்சாயத்து போர்டிலே வேலை பார்க்கும் சுகாதார இன்ஸ்பெக்டர்களுக்கும் முனிசிபாலிடியில் வேலை பார்க்கும் சுகாதார இன்ஸ்பெக்டர்களுக்கும் ஒரேவிதமான சம்பளம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : பஞ்சாயத்துக்களை யெல்லாம் திருத்தியமைக்க ஒரு மசோதா வருகிறது. அதிலே இதுவும் கவனிக்கப்படும் என்று நினைக்கிறேன்.

Cement factory

*5 *Q*.— **SriM. S. SELVARAJAN**: கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—திருச்செந்தூர் தாலுக்காவில் இருக்கும் சிமிண்டுக்கு லாயக்கான மூலப் பொருள்களை உபயோகப்படுத்திக் கொண்டு அப்பகுதியில் ஓர் சிமிண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

The Hon. Sri R. VENKATARAMAN : Cement industry has been left to the private sector for development. The Government have no proposals to start any cement factory in Tiruchendur taluk.